**செய்தி வெளியீட்டு எண்.88** **நாள்: 27.1.010**

**பத்திரிகை வெளியீடு**

புதியதாக திருத்தியமைக்கப்பட்ட தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் முதல் கூட்டம் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் கூட்ட அரங்கில் 27.01.2010 அன்று மதியம் 3.00 மணியளவில் நடைபெற்றது. தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர் தேர்தலுக்கான இக்கூட்டத்தை தமிழ் நாடு மாநில வக்ஃபு வாரியத் தலைவர் திரு. கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டம் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வக்ஃபு அமைச்சர் திரு டி.பி.எம். மைதீன் கான் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயலர் திரு. டி.என். இராமநாதன், இ.ஆ.ப. ஆகியோர் முன்னிலையில் நடந்தது. அரசால் நியமனம் செய்யப்பட்ட பின்வரும் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை ஹோட்டல் பிரசிடென்ட் உரிமையாளர் ஹாஜி அபுபக்கர் அவர்களை ஏகமனதாக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக தேர்ந்தெடுத்தனர்.

| <u>வரிசை எண்.</u> | <u>உறுப்பினர் பெயர்</u> |
|---|---|
| 1. | ஜனாப் ஜே.எம். ஆரூண் ரஷீத், நாடாளுமன்ற உறுப்பினர். |
| 2. | ஜனாப் எஸ்.ஏ.எச். பஷீர் அஹமது, தலைவர், கீழக்கரை நகராட்சி. |
| 3. | ஜனாப் எஸ்.கே.கே. ஹக்கீம், துணைத் தலைவர், பழனி நகராட்சி. |
| 4. | ஜனாப். என்.ஏ. சுலைமான் பாட்சா, தலைவர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம். |
| 5. | ஜனாப் அஸ்கர் அலி தல்லா, தலைவர், அஞ்சுமன்-ஈ-ஹுசைனி, சென்னை. |
| 6. | மௌலவி பி.ஏ. காஜா மொய்னுத்தீன் பாக்கவி, பேராசிரியர், உஸ்மானியா அரபிக் கல்லூரி, மேலப்பாளையம், திருநெல்வேலி. |
| 7. | ஜனாப் நவாப் ஜாதா முஹம்மது ஆசிப் அலி, ஆற்காடு இளவரசரின் மகன், அமீர் மஹால், சென்னை. |

8. ஹாஜி எச். முஹம்மது அப்சல், கௌரவச் செயலாளர், தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி, சென்னை.

9. ஜனாப் ஆரிப், இயக்குநர், பர்வீன் டிராவல்ஸ், சென்னை.

10. ஜனாப் அபுபக்கர், மேலாண் இயக்குநர், ஹோட்டல் பிரசிடெண்ட், சென்னை.

11. அல்ஹாஜ் திருப்பூர் எம்.ஏ. சத்தார், பொதுச் செயலாளர், தமிழ் நாடு மாநில காயிதே மில்லத் பேரவை, சென்னை.

12. டாக்டர் கவிக்கோ அப்துல் ரஹ்மான், தலைவர், தமிழ் நாடு வக்ஃப் வாரியம், சென்னை.

13. ஜனாப் கா. அலாவுதீன், இ.ஆ.ப., உறுப்பினர் மற்றும் செயல் அலுவலர், தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, சென்னை.

2. ஹஜ் குழுவின் உறுப்பினர் மற்றும் செயல் அலுவலர் திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள் மாண்புமிகு அமைச்சர், அரசுச் செயலர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றார். உறுப்பினர்கள் அனைவரும் தங்களை மாநில ஹஜ் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர். புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஹாஜி அபுபக்கர் அவர்களும் தம்மை உறுப்பினராக நியமித்ததற்கும் மற்றும் ஹஜ் குழுவின் தலைவர் பதவிக்கு தகுதியுடையவராக ஆக்கியமைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். தமிழக அரசு மற்றும் நடுவன் அரசு ஆகியவற்றின் உதவியால் ஹஜ் பயணிகளின் நலனுக்காக பாடுபடுவதாக உறுதி அளித்தார்.

**கா. அலாவுதீன், இ.ஆ.ப.,**
**உறுப்பினர் மற்றும் செயல் அலுவலர்.**

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**